<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இலுப்பூர்</u>

**முன்னிலை: திருமதி. சாதத்துணிஷா, பி.ஏ. பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

2025ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 02ம் நாள் செவ்வாய் கிழமை

**<u>புதிய இடை நிலை மனு எண். 09/2025</u>**

in

**<u>அசல் வழக்கு எண். 97/2019</u>**

அடைக்கன் வகையறா ..... மனுதாரர்கள்/வாதிகள்

... எதிர் ...

1. சின்னத்தம்பி மற்றும் ஒருவர் ..... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது என் முன்பாக 02.12.2025-ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபொழுது மனுதார்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.A.அழகேசன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.சோலை முத்தையா, அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு சாட்சி மற்றும் சானறாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது, 1) பிராதுபாரா 3ல் உரிமை விளம்பல் அதனையொத்த நிரந்தர தடையாணை, செயலுறுக்கட்டளை, செலவுத் தொனை இன்னபிற பரிகாரங்களுக்கு தாவா என இருப்பதில், நிரந்தர தடையாணை, செயலுறுத்துக்கட்டளை என்பதனை நீக்கிவிட்டு சுவாதீன மீட்புனை பரிகாரம் என சேர்க்கவும்,

2) பிராது பாரா 5 (அ) என்பதற்கு அடுத்து கீழ்க்கண்ட பாராவினை 5(ஆ) என சேர்க்கவும்,

5) (ஆ) வாதிகள் தாவா சொத்தின் ஒரு பகுதியில் ஆக்கிரமித்து சட்டப்புறம்பாக கட்டியுள்ள சிறிய தார்சு வீடு கட்டுமானத்தை நீக்கிட ஏதுவாக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், மேற்படி வழக்கை 03.12.2018ல் தாக்கல் செய்தனர் என்றும், அதன் பின்னிட்டு கொரோனா நோய் தொற்று (COVID _1) காரணமாக நாடு முழுவதும் முழு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதால், தொழில் நிமித்தமாக வெளியூர் சென்ற வாதிகள் 15.03.2020 முதல் ஆங்காங்கு தங்கியிருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்றும், அந்த சமயத்தினை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்ட பிரதிவாதிகள் ஏற்கனவே சட்டப்புறம்பாக ஆக்கிரமித்து எழுப்பிய தார்சு வீட்டில் 15.03.2020ல் குடியேறிவிட்டார்கள் என்றும், இது குறித்து அச்சமயம் முழு ஊரடங்கு உத்தரவு அமலில் இருந்ததால் புகார் எதுவும் போலுசாரிடம் கொடுக்க இயலவில்லை என்றும், வாதிகள் தார்சு வீட்டினை நீக்கிட ஏற்கனவே செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியதால் அதனை நம்பியும் இருந்து விட்டனர் என்றும், தற்போது தார்சு வீட்டில் குடியேறியும் வீட்டிற்கு எதிரே தற்போது ஆஸ்பெட்டாஸ் சீட்டினால் சப்பாட்டு கூடும் அமைத்து உள்ளர் என்றும், எனவே வாதிகள் வழக்கை உரிமை விளம்பல் அதன் தொடர்ச்சியாக சுவாதீன மீட்புகை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும்,

3) பிராதுபாரா 8ல் தாவாச் சொத்தின் மதிப்பீடு பாராவின் வாதிகள் கோரும் உரிமை விளம்பல் அதனையொத்து நிரந்தர தடையாணை பரிகாரத்திற்காக என உள்ளதில், நிரந்தர தடையாணை என்பதனை மட்டும் நீக்கிவிட்டு, சுவாதீன மீட்புனை என திருத்தவும், மேலும் அதே பாராவில் சந்தை மதிப்பு பாதி ரூ. 30,635/– வருவதால் இந்த வழக்கின் நீதிமன்ற கட்டணமாக ரூ.919 இத்துடன் செலுத்தப்பட்டுள்ளது என்பதனை நீக்கிவிட்டு சந்தை மதிப்பு

ரூ.61,270/– என மதிப்பிடப்படுகிறது. அதில் உள்ள சிறிய தார்சு வீட்டின் சுமார் மதிப்பு ரூ.3,00,00/– என மதிப்பிடப்படுகிறது என்றும், தார்சு வீட்டிற்கு எதிர்புறம் உள்ள ஆஸ்பெட்டாஸ் சீட்டு வீட்டில் சுமார் மதிப்பு ரூ.40,000/– ஆகும் என்றும், ஆக மொத்த மதிப்பு ரூ.4,01,270/– என மதிப்பிடப்பட்டு அதற்கு தமிழ்நாடு நிதிமன்ற கட்டணச் சட்டம் பிரிவி 25(a) ன் கீழ் ரூ.12,038.10/– நீதிமன்றக் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது என சேர்க்கவும்,

4) பிராது பாரா 8ல் கண்ட இதர பாராக்களை நீக்கவும்,

5) பிராது பரிகார பாராவில் 1ல் அதனையொத்து என உள்ளதற்கு அடுத்துள்ள நிரந்தர தடையாணை கோரும் துணை பாராவினை நீக்கிவிட்டு, அதனையொத்து தாவா சொத்தின் சுவாதீனம் பிரதிவாதிகள் வாதிகள் வசம் ஒப்படைக்க ஏதுவாக சுவாதீன மீட்புகை பரிகாரம் வழங்கியும் என சேர்க்கவும், அதே பாராவில் 2வது பரிகாரத்தினை நீக்கிவிட்டு 3வதாக உள்ள பரிகாரத்தை (2) என திருத்தம் செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 –ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுவின் சுருக்கம்</u>**

தான் மேற்படி மனுவில் 2ம் மனுதார்/ வழக்கில் 2ம் வாதி என்றும், 1ம் வாதி தனது தகப்பனார், இதர வாதிகள் தனது சகோதரர்கள் ஆவார்கள் என்றும், அவர்களுக்காகவும் சேர்த்து இம்மனு செய்கிறேன் என்றும், மேற்படி வழக்கை தாங்கள் உரிமை விளம்பல், நிரந்தர தடையாணை, செயலுறுத்துக் கட்டளை, செலவுத் தொகை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ளோம் என்றும், மேற்படி வழக்கு இன்று தினம் தனது விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும், வழக்கு 3ம் வாதியான தனது சகோதரர் கடந்த 20.01.2019ம் தேதியில் மாடுமுட்டி அகாலமரணம் அடைந்து விட்டார் என்றும், தனது சகோதரர் திடீரென மாடு முட்டி அகாலமரணம் மரணமடைந்த துக்கத்திலும், தாங்கள் இருந்து மீள்வதற்குள் நாடு முழுவதும் அறிவிக்கப்பட்ட கொரோனா நோய் தொற்று (COVID –I) காரணமாக (முழு ஊரடங்கு

அறிவிக்கப்பட்டு, நீதிமன்ற விடுமுறை 15.03.2020 முதல் 09.06.2022 வரை) தங்களது வழக்குரைஞரை சந்தித்து மேற்படி பற்றிய முழுவிபரங்களை பேச இயலவில்லை என்றும், அதன் பிறகு தனது சகோதரர் இறந்தது சம்பந்தமாக வாரிசு சேர்க்க வேண்டுமென தங்கள் வழக்குரைஞர் தெரிவித்தன் அடிப்படையில், தனது சகோதரரின் வாரிசுகள் இவ்வழக்கில் 6 முதல் 9 வாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கடந்த 20.11.2017ம் தேதியில் ஆக்கிரமிப்பு செய்ய முயன்றதனை தாங்கள் தடுத்த பிறகும், அதனையும் மீறி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தங்களது சொத்தின் ஆக கீழ்புரம் ஒரு சிறிய இடத்தில் ஒரு தார்சு வீடு கட்டியுள்ளார்கள் என்றும், மேற்படி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் சட்டப்புறம்பான முறையில் தங்களது சொத்தின் ஒரு பகுதியில் ஆக்கிரமித்து கட்டியுள்ள சிறிய தார்சு வீடு கட்டுமானத்தை நீக்கிட ஏதுவாக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மேற்படி வழக்கை 03.12.2018ம் தேதியில் தாக்கல் செய்தோம் என்றும், அதன்பின்னிட்டு கொரோனா நோய் தொற்று (COVID –I) காரணமாக நாடு முழுவதும் முழு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதால் தொழில் நிமித்தமாக வெளியூர் சென்ற தானும், இதர வாதிகளும் 15.03.2020 முதல் ஆங்காங்கு தங்கியிருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்றும், அந்த சமயத்தினை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்ட எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஏற்கனவே தாவாச் சொத்தின் ஒரு பகுதியில் சட்டப்புறம்பாக ஆக்கிரமித்து எழுப்பியுள்ள சிறிய தார்சு வீட்டில் 15.03.2020ல் குடியேறிவிட்டார்கள் என்றும், இது குறித்து அச்சமயம் நாடு முழுவதும் முழு ஊரடங்கு உத்தரவாக இருந்தால், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது புகார் கொடுக்கவும் இயலாமல் போய்விட்டது என்றும், தாங்களும் 20.01.2019 ம் தேதியில் திடிரென மாடு முட்டி அகாலமரணமடைந்த அதிர்ச்சியிலும், துக்கத்திலும் இருந்து வந்ததாலும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் சட்டப்புறம்பாக வழக்குச் சொத்தில் கட்டுமானத்தை (தார்சு வீடு) இடித்து

அப்புறப்படுத்த 2018ல் வழக்கு தாக்கல் செய்திருந்தாலும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கடந்த 15.03.2020 ல் மேற்படி தார்சு வீட்டிற்கு குடியேறி விட்டதனை தங்கள் வழக்குரைஞருக்கு குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை என்றும், மேலும் தங்களுக்கு போதிய படிப்பறிவு மற்றும் வெளியுலக அனுபவம் இல்லாததாலும், மேற்படி விசயம் குறித்து வழக்குரைஞரிடம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றம், தற்போது தங்கள் தரப்பு சாட்சி விசாரணை ஆரம்பமாக இருக்கும் சமயம் தங்கள் வழக்குரைஞரிடம் மேற்படி வழக்கிற்கு பின்னிட்ட விசயங்கள் அனைத்தையும் ஒவ்வொன்றாக குறிப்பிட்டுக் கேட்டபோதுதான் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் குடியேறிய விசயம் குறித்து தாங்கள் சொல்ல விட்டுப்போனது தெரியவந்தது என்றும், எனவே, தாவாச் சொத்தின் சுவாதீனத்தை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வசமிருந்து தங்களுக்கு மீட்டுத்தர ஏதுவாக மேற்படி வழக்கை உரிமை விளம்பல் அதன் தொடர்ச்சியாக சுவாதீன மீட்புகை பரிகாரம் கோரி, மேற்படி வழக்கில் உரிய திருத்தம் மேற்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், எனவே மேற்படி வழக்கில் இம்மனுவில் கண்ட திருத்தல் விபரப்படிக்கு உரிய திருத்தம் மேற்கொள்ள அனுமதித்து தகுந்த உத்தரவிடவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரை:</u>

மனுதாரர்களின் மனு பொய், பிரட்டு, மோசடி, எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யக்கூடியது என்றும், இந்த எதிருரையில் 1–ம் எதிர்மனுதாரரால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளபட்டவை தவிர பிறயாவற்றையும் மறுப்பதால் அவற்றை மனுதாரர்களே கண்டிப்பாக நிரூபணம் செய்ய கடமைபட்டவர் ஆவார் என்றும், மனு ஆணையுறுதிப்பத்திரம் பத்தி 3–ல் சொல்லியுள்ள விபரங்களை 1–ம் எதிர்மனுதாரர் குறிப்பாக மறுக்கிறார் என்றும், மேற்படி வழக்கு கடந்த 07.02.2025–ம் தேதி மனுதாரர்கள் தரப்பு

விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டது என்பது தவறாகும் என்றும், மேற்படி வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் 1வது சாட்சியாக 2ம் மனுதாரர் கடந்த 20.12.2023–ம் தேதி (PW1) ஆக விசாரணை செய்யப்பட்டு கடந்த 1 ½ ஆண்டுகளுக்கு மேலாக மேற்படி வழக்கு PW1 முதல் விசாரணை மற்றும் அதனை தொடர்ந்து குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் இருந்து வருகிறது என்றும், இந்நிலையில் மேற்படி அசல் வழக்கை மேலும் காலதாமதப்படுத்த வேண்டும் என்ற காரணத்திற்கான மனுதாரர்களால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கில் வழக்கு விசாரணை தொடங்கிய பிறகு அசல் வழக்குரையை திருத்தம் செய்ய உரிமையியல் நடைமுறை சட்டம் 6 விதி 17 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு சட்டப்படி நிலைநிற்கதக்கதல்ல என்றும், வழக்கு விசாரணை தொடங்கப்பட்ட பின்னர் அசல் வழக்குரையை திருத்தம் செய்ய போதுமான காரணங்கள் மனுதாரர்கள் தரப்பில் சொல்லப்படவில்லை என்றும், 3–ம் மனுதாரர் கடந்த 20.01.2019–ம் தேதி மாடு முட்டி இறந்துவிட்டார் என்பதும், அதனால் மிகுந்த துக்கத்தில் மனுதாரர்கள் இருந்து வந்தனர் என்பதும், அதனை தொடர்ந்து கொரோனா ஊரடங்கு இருந்து வந்தது என்பதும், அதனால் வழக்கறிஞரை சந்தித்து மேற்படி வழக்கு பற்றிய முழு விபரமும் சொல்ல இயலவில்லை என்பதும் தவறாகும் என்றும், மேற்படி வழக்கில் 3–ம் மனுதாரர் இறந்தது காரணமாக வாரிசு மனு தாக்கல் செய்யப்பட்டு I.A.No. 460/2023 என்ற எண்ணில் கடந்த 04.11.2023–ம் தேதியிட்ட உத்தரவின் படி அசல் வழக்கு வழக்குரை உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6 விதி 17 –ன் கீழான மனு மூலம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றும், தற்போது 1 ½ ஆண்டுகளுக்கு பிறகு அசல் வழக்குரையை திருத்தம் செய்ய மனுதாரர்கள் தரப்பில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17–ன் கீழான இந்த மனு உள்நோக்கத்துடன் மிகுந்த காலதாமத்துடன், காலதாமத்திற்கு காரணம் தெரிவிக்காமலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனு

ஆணையுறுதிப்பத்திரம் பத்தி 4–ல் சொல்லியுள்ள விபரங்களை 1–ம் எதிர்மனுதாரர் குறிப்பாக மறுக்கிறார் என்றும், வழக்கு சொத்தை எதிர்மனுதாரர்கள் 20.11.2017–ம் தேதி ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்தனர் என்பதும், அதனை மனுதாரர்கள் தடுத்தனர் என்பதும், அதனை மீறி எதிர்மனுதாரர்கள் வழக்கு சொத்தின் ஒரு பகுதியில் சிறிய இடத்தில் ஆக்கிரமனம் செய்து தார்சுவீடு கட்டிவிட்டனர் என்பதும் அதனால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்பதும் தவறாகும் என்றும், வழக்கு சொத்தில் 20 ஆண்டு காலத்திற்கு மேலாக வீடு உள்ளது என்றும், மேற்படி விபரத்தை 1–ம் எதிர்மனுதாரர் தனது 19.06.2019–ம் தேதியிட்ட எதிர்வழக்குரையில் பத்தி 9–ல் தெளிவாக குறிப்பிட்டுள்ளார் என்றும், கொரோனா ஊரடங்கு காலத்தில் மனுதாரர்கள் தொழில் நிமித்தமாக வெளியூரில் வசித்து வந்தனர் என்பதும், அதனை எதிர்மனுதாரர்கள் சாதகமாக பயன்படுத்தி கொண்டு வழக்கு சொத்தில் குடியேறிவிட்டனர் என்பதும், கொரோனா ஊரடங்கு அமலில் இருந்ததால் மனுதாரர்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க இயலவில்லை என்பதும், மேலும் 3–ம் மனுதாரர் மாடு முட்டி இறந்தினால் மனுதாரர்கள் துக்கத்தில் இருந்ததினாலும் எதிர்மனுதாரர்கள் செயல் குறித்து வழக்கறிஞரிடம் தெரிவிக்க இயலவில்லை என்பதும் தவறாகும் என்றும், வழக்கு சொத்தில் 20 ஆண்டு காலத்திற்கு மேலாக வீடு உள்ளது என்றும், மேற்படி வீடு குடியிருந்து வரும் வீடாக பயன்பாட்டில் இருந்து வருகிறதுஎன்றும், மேற்படி விபரத்தை 1–ம் எதிர்மனுதாரர் தனது 19.06.2019–ம் தேதியிட்ட எதிர்வழக்குரையில் பத்தி 9–ல் தெளிவாக குறிப்பிட்டுள்ளார் என்றும், மனுதாரர்களுக்கு போதிய படிப்பறிவு மற்றும் வெளி அனுபவம் இல்லை என்பதும் தற்போது தான் மனுதாரர்கள் தங்கள் வழக்கறிஞரிடம் வழக்கிற்கு பின்னிட்ட விசயங்கள் அனைத்தையும் ஒவ்வொன்றாக கேட்டபோது எதிர்மனுதாரர்கள் மேற்படி வீட்டில் குடியேறி விபரத்தை தெரிவித்தனர் என்பதும், அதனால் தற்போது தான் திருத்தல் மனு

தாக்கல் செய்யப்படுகிறது என்பது தவறாகும் என்றும், மேற்படி வழக்கில் 2ம் மனுதாரர் PW1 ஆக சாட்சி விசாரணையை கடந்த 20.12.2023ம் தேதி செய்யப்பட்டு அவர் மூலம் 15 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு சாட்சி சொல்ல மனுதாரர்கள் தரப்பில் PW1 தயாராக இருந்த நிலையில் 1 ½ ஆண்டுகளுக்கு பிறகு தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு சட்டப்படி ஏற்புடையது கிடையாது என்றும், மனு திருத்தல் விபரத்தில் வழக்கு சொத்தின் மதிப்பை தவறாக மனுதாரர்கள் கணக்கீட்டு நீதிமன்ற கட்டணத்தை குறிப்பிட்டுள்ளனர் என்றும், அரசு வழிகாட்டி மதிப்பு படி ஒரு ஏக்கர் மதிப்பு ரூ.2,11,000/- என உள்ளது என்றும், வழக்கு சொத்தில் உள்ள கட்டிடங்கள் ரூ.15,00,000/-த்திற்கு மேல் மதிப்புடையதாகும் என்றும், மனுதாரர்கள் வழக்கு சொத்தை குறைவாக மதிப்பிட்டு குறைவு நீதிமன்ற கட்டணம் செலுத்த முயற்சி செய்கின்றனர் என்றும், மனுதாரர்கள் மனு சொத்தை மதிப்பிட்டுள்ளதற்கு எந்த ஒரு ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றும், மனுதாரர்களின் மனுவில் அசல் வழக்கை திருத்த வழக்கு மூலம் சொல்லப்படவில்லை என்றும், எனவே திருத்தல் மனு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யக்கூடியது என்றும், மனுதாரர்களின் மனு காலவாதிதோஷத்தால் தள்ளுபடி செய்யக்கூடியது என்றும், மனுதாரர்களின் வழக்கு உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 35(A)ன்படி அதிக பட்ச செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யக்கூடியது என்றும், மனுதாரர்களின் மனுவில் எந்த சட்ட முகாந்திரமும் கிடையாது என்றும், மனுப்படி எந்த பரிகாரமும் மனுதாரர்களுக்கு கிடைக்கதக்கதல்ல என்றும், எனவே மனுதாரர்களின் மனுவை இந்த 1-ம் எதிர்மனுதாரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்திரவிட வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதேயாகும்.

**3. பிரச்சனைக்கான தீர்வு**

(அ) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்கள் தரப்பில் இந்த மனுவும்,பிராது பாரா 3ல் உரிமைவிளம்பல், அதனையொத்து நிரந்தர தடையாணை,செயலுறுத்துக்கட்டளை, செலவுத்தொகை இன்னபிற பரிகாரங்களுக்கு தாவா என இருப்பதில் நிரந்தர தடையாணை, செயலுறுதுதுக் கட்டளை் எனபதை நீக்கி விட்டு சுவாதீன மீட்பு பரிகாரத்தை சேர்க்க அசல் வழக்கை திருத்தம் செய்ய வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது

(ஆ) எதிர்மனுதாரர்கள் தரப்பில், இந்த மனுவை அனுமதிக்க ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இம்மனு காலதாமதமாக மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்குச் சொத்தில் 20 ஆண்டு காலத்திற்கு மேலாக வீடு உள்ளது என்றும், அதனை மறைத்து பொய்யாக மனுதாரர் தரப்பில் இந்த மனு தாக்கல் செய்ப்பட்டுள்ளது என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

இ)மேற்படி, எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவை ஆட்சேபனை தரிவித்துள்ளபோதிலும், இந்நீதிமன்றம் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன் தீர்ப்பான 2011-4LW-252, Revathy and 2 others Vs Savarimuthu என்ற முன் தீர்ப்பினை கருத்தில் எடுத்துக் கொள்கிறது. மேற்கண்ட தீர்ப்பில், "It is common Knowledge that while deciding the application for amendment the merits of the amendment cannot be discussed and it has to be seen only at the time of trial" என்று கூறப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட முன்தீர்ப்பு மற்றும் தீர்வு சட்டத்தின் படி திருத்தத்தின் தகுதியை பற்றி தற்போது விவாதிக்க இயலாது என்பதும், அது வழக்கு

விசாரணையின் போது மட்டுமே பார்க்க இயலும் என்பதும் தெளிவாகிறது.

(ஈ) மேலும், இந்நீதிமன்றம் மாண்புமிகு உச்சநீதிமன்ற முன் தீர்ப்பான (2007) 5 SCC 602, Usha Balashaheb Swami and others Vs Kiran Appaso Swami and others என்ற முன் தீர்ப்பினை மேற்கோள்காட்டுகிறது. மேற்கண்ட தீர்ப்பில்,
" the amendment application made under Order VI Rule XVII CPC has to be liberally allowed provided such amendment do not result in causing injustice or irretrievable prejudice to the opposite party" என்று கூறியுள்ளது.

எனவே, மேற்கண்ட தீர்ப்பின் படி தற்போதுள்ள இந்த மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு அசல் வழக்கில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவும், மேலும் வழக்கு விசாரணையின் போது இது தொடர்பாக குறுக்கு விசாரணை செய்யவும், எதிர்வாதம் செய்யவும் வாய்ப்புள்ளதாலும், எனவே எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித குந்தகமும் ஏற்பட வாய்ப்பில்லை என்பதாலும், மேலும் இவ்வழக்கினை சரியான முறையில் தீர்வு காண்பதற்கும் மற்றும் வழக்கில் பலவித நடவடிக்கைகளை தவிர்க்கவும் இயலும் எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேற்கண்ட பரிசீலனையின் அடிப்படையில் மனுதாரர்கள் கோரியுள்ளபடி அசல் வழக்கை திருத்துவதற்கு இந்த மனுவை அனுமதிக்க உத்தரவிடுவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மனுதாரர்கள்/வாதிகளின் மேற்படி செய்கையால் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்டுள்ள காலதாமத்தை ஈடு கட்டும் வகையில் எதிர்மனுதாரர்களின் செலவு தொகையுடன் இந்த மனுவினை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, மனுதாரர்கள்/வாதிகள் செலவு தொகையாக ரூ.1000/– எதிர்மனுதாரர்களுக்கு செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 18.12.2025.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2025ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 02–ம் நாள் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

M SATHATHUNISHA

Digitally signed by M SATHATHUNISHA
Date: 2025.12.02 12:07:18 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

M SATHATHUNISHA

Digitally signed by M SATHATHUNISHA
Date: 2025.12.02 12:07:26 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.